[9th August 1965

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒப்பந்தம் ஏற்படும்போது, சிலோனிலிருந்து வரக்கூடிய எல்லோரையும் தமிழகத்திலேயே 'ஸெட்டில்' செய்வது கஷ்டம் என்ற காரணத்திற்காக, இந்த நாட்டின் பிரதம அமைச்சர் அவர்கள் இதை ஒரு தேசியப் பிரச்னையாக ஏற்றுக்கொள்ளவேண்டும், மற்ற மாநிலங்களும் இவர்களை எடுத்துக்கொள்வதற்கு உதவி செய்யவேண்டும் என்ற கோரிக்கையைக் விடுத்திருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி இலங்கையிலிருந்து வருகிறவர்களுடைய தொகை கணிக்கப்பட்டு, அவர்களுடைய கல்வி முதலியவற்றிற்கு மட்டுமின்றி, வீடு, வாழ்க்கைக்கு வேண்டிய பிற தொழிற் துறை முயற்சிகள், இவற்றில் உதவி வேண்டியவர்கட்கு எல்லாம் ஒரு கணக்கெடுத்து, அந்தக் கணக்கின் அடிப்படையிலே இப்பொழுது அரசாங்கம் உதவியோ அல்லது வாய்ப்பு வசதியோ செய்துகொண்டிருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** செய்துகொண்டிருக்கிறது. கல்வித் துறையில் மட்டுமல்ல ; அவர்கள் தொழில் நடத்துவதற்கும் சிறு கடனுதவியும் கொடுக்கிறது. அங்கிருந்து திரும்பி வந்திருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக் கூடிய முறையிலே நாஸரெத்தில் ஒரு ஸ்பின்னிங் மில்லை ஆரம்பம் செய்திருக்கிறார்கள். இன்னும் மற்ற, மற்ற உதவிகளும் கொடுக்கப் படுகின்றன. அங்கிருந்து திரும்பக்கூடியவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களாக இருந்தால், அவர்களுக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் தென்னை வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் தென்னை வளர்க்க மானிய உதவி கொடுப்பதோடு, ஐந்து ஏக்கர் நிலமும் கொடுக்கிறோம்.

*Electrification of new Rail Lines*

* 142 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the State Government have requested the Union Government for electrification of new rail lines in the State during the Fourth Five-Year Plan period ; and

(*b*) If so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes; the State Government have requested the Government of India for electrification of the railway lines from Madras to Arkonam and from Madras to Vijayawada in that order of priority during the Fourth Plan period. The Government of India have indicated that project investigations are being made by the Railway.

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி இவ்வளவு நீளத்திற்கு எலெக்ட்ரிக் ட்ரெயின்ஸ் விடுவதனால், இப்பொழுது இருந்து கொண்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறை மேலும் அதிகப்படக் கூடுமானால் அப்பொழுது அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ? அதற்காக டீஸல் முறையையோ அல்லது வேறு முறையையோ கைக்கொள்ளுவதற்குத் திட்டம் போட்டு

9th August 1965]

அந்த அடிப்படையில் இது சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா ? இப்பொழுது சிபார்சு செய்யப்பட்டு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்த ஆலோசனை என்ன நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா** : போக்குவரத்துத் தேவையை அனுசரித்து இந்த செக்ஷனிலே மின்சாரம் பொருத்துவது நல்லதா டீஸல் இன்ஜின் ஓட்டுவது நல்லதா என்றெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும். அதெல்லாம் இன்வெஸ்டிகேஷனில் இருந்துகொண்டிருக்கிறது. மின்சாரம் போதாவிட்டால் அதை அதிகப்படுத்த வேண்டியதுதான்.

### சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை இரட்டை இரயில்பாதை

*143 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு** : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வரை இரட்டை இரயில் பாதை (Double line) போடும் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி இம்மாநில அரசு மத்திய அரசாங்கத்திடம் சிபாரிசு செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) No. However, to meet the growing industrial needs, the laying of a new broad gauge line from Villupuram to Chingleput and Arkonam and conversion of the Tiruchirappalli–Villupuram metre gauge line to broad gauge is being suggested to the Government of India for inclusion in the Fourth Plan.

**திரு. ஆ. தங்கவேலு** : தலைவர் அவர்களே, டபிள் லைன் இல்லாத காரணத்தால் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து, அதைத் தவிர்ப்பதற்காவது டபிள் லைன் ஏற்படுத்த இனியாவது முயற்சிப்பார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா** : இப்பொழுதிருக்கக்கூடிய முயற்சியெல்லாம், இருக்கக்கூடிய மீட்டர் கேஜ் லைனை ப்ராட் கேஜாக மாற்றவேண்டும் என்பதுதான்.

**திரு. செ. மாதவன்** : இந்த ரயில்கள் தாம்பரத்திற்கு வந்து, அங்கிருந்து எழும்பூருக்கு வருவதற்கு மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் இரட்டை லைன் இல்லாததுதான். தாம்பரம் வரையிலாவது டபிள் லைன் போட அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமையா** : இப்பொழுது அது பரிசீலனையில் இல்லை.